## திருத்தம்

### இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்

தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் நிலவும் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் புலமைச்சொத்து உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

*அரசாங்க வர்த்தமானியில் 2024.06.28 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் நிலவும் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தர் தரம் - III இன் புலமைச் சொத்து உத்தியோகத்தர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை - பரீட்சை அறிவித்தல் - 2024 இன் 1 ஆம் 2 ஆம் பந்திகள் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றன.*

01. **தகைமைகள் :**

i. கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட பட்டதாரியாகவும், 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் காணப்படுவோரும், தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாயின் அதிகபட்ச வயதுக் கட்டுப்பாட்டை கருத்திற்கொள்ளாமல் குறித்த பரீட்சைக்கு இம்முறை மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு அமைவானது)

ii. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமாணி/ சட்டமாணி அல்லது வணிகமாணி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

iii. ஆங்கில மொழியில் தேர்ச்சி மற்றும் கணினி அறிவு என்பன மேலதிக தகைமைகளாக கொள்ளப்படும்.

02. **பரீட்சைக்கான நிபந்தனைகள்:**

பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk இல் "எங்கள் சேவைகள்" இன் கீழுள்ள "ஆன்லைன் விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/E.B. தேர்வுகள்)" இல் விண்ணப்பங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி பி.ப.09.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான ஏனைய அனைத்து நிபந்தனைகளும் 2024.06.28 ஆந் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றமின்றி தொடர்ந்திருக்கும்.

கீதாஞ்சலி ஆர். ரணவக்க,
புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

08-77